In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi
S.C.No.250/2022
Deposition of P.W.4

| | |
|---|---|
| Name | திரு.ரவி |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 11th day of December 2024.

(1 வது எதிரி ஆஜர் செய்யப்பட்டார்.2 வது எதிரி ஆஜர்.3 வது எதிரி ஆஜர் இல்லை.3 வது எதிரியின் வருகையின்மையை மன்னிக்க பிரிவு 355 பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை** :

நான் மருதன்வாழ்வில் குடியிருந்து வருகிறேன். என் மனைவி ஊராட்சிமன்ற தலைவியாக இருந்து வருகிறார். என் வீட்டின் எதிரில் சாட்சி அழகர்சாமியின் வீடு உள்ளது. எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும்.(1,2 எதிரிகள் ஆஜர்.3 வதுஎதிரி ஆஜர் இல்லை. அவரது வருகையின்மையை மன்னிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு ஏற்கப்பட்டது.) தேதி ஞாபகமில்லை. வருடமும் ஞாபகமில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள் எதிரிகள் மூவரும் அழகர்சாமியின் வீட்டிற்கு ரீசார்ஜ் செய்வதற்காக சென்றதை பார்த்தேன். அன்றைய தினம் இரவு சுமார் 7 மணியளவில் அழகர்சாமியின் வீட்டருகே ஆட்களாக இருந்தார்கள். நானும்போய் பார்த்தேன். அழகர்சாமியின் மனைவியை குளிப்பாட்டினார்கள். அப்போது அழகர்சாமியின் மனைவியின் உதட்டில்

சின்ன காயம் இருந்தது. கை,கால்களிலும் காயம் இருந்தது. அழகர்சாமியின் மனைவியை குளிப்பாட்டிய பின்னர் அழகர்சாமி எங்களிடம் தனது மனைவியின் கழுத்தில் இருந்த நகையையும் கம்மல்களையும் காணவில்லை என்று சொன்னார்.3 வது எதிரி ஏற்கனவே ஒரு திருட்டு வழக்கிற்கு பின்னர் எங்கள் ஊரில் வசித்து வந்தார். அழகர்சாமியும் அவரது மகன்களும் மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். நானும் அவர்களுடன் காவல் நிலையத்திற்கு சென்றேன். புகார் கொடுத்தபின்னர் போலீசார் எங்கள் ஊருக்கு வந்து விசாரித்தார்கள். பின்னர் அதேதினம் எதிரிகளை பிடிக்கவேண்டும் என்றும், அதற்கு காரை ஏற்பாடு செய்துதரும்படி போலீசார் அழகர்சாமியின் மகனிடம் கேட்டார்கள்.நான் தான் காரை ஏற்பாடு செய்து கொடுத்தேன். திருச்செந்தூர் கோவிலில் 1வது எதிரிக்கு மொட்டை போட்டு கொண்டிருந்தார்கள். இந்தநிலையில் எதிரிகள் மூவரையும் பிடித்து விட்டதாக ஆய்வாளர் தர்மர் என்னை அலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவித்தார். 3வது எதிரி சண்முககனி ஒரு பெண்ணை வளர்த்து வருகிறார். அந்த பெண்ணின் பெயர் ஞாபகமில்லை. அந்த பெண்ணுக்கு திருமணம் ஆகவில்லை. அந்த பெண்ணும் 3வது எதிரியுடன் எங்கள் ஊரில் வசித்து வந்தார். எனவே அந்த பெண்ணையும் இந்த வழக்கில் சேர்க்கும்படி நான் ஆய்வாளர் தர்மரிடம் கூறினேன். ஆனால் ஆய்வாளர்தர்மர் அந்த பெண்ணை இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கவில்லை. எனவே நாங்கள் ஊர்மக்கள் அனைவரும் கூடி ஆய்வாளர் தர்மரிடம் சொன்னோம். ஆனால் அவர் அந்த பெண்ணை இந்த வழக்கில் எதிரியாக சேர்க்காமல் விட்டுவிட்டார். மீனாட்சியை எதிரிகள் மூவரும் கொலை செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

3 வது எதிரியின் மீது இருப்பதாக நான் சொல்லும் குற்ற வழக்கின்குற்ற எண் என்ன என்று எனக்கு தெரியாது. அந்த குற்றவழக்கு குறித்த வேறு விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. 04.07.2022 ம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள். 03.07.2022 ம் தேதி மதியம் 3 மணியளவில் ஆய்வாளர் எனக்கு போன் செய்து எதிரிகள் மூவரையும் பிடித்துவிட்டதாக என்னிடம் சொன்னார்கள். (தற்போது சாட்சி மாலை 4.30 மணிக்கு ஆய்வாளர் தனக்கு தகவல் தந்ததாக தெரிவித்தார்). கோவில்பட்டியில் வைத்து எதிரிகள் மூவரையும் கைது செய்துவிட்டதாக ஆய்வாளர் எனக்கு தகவல் தந்தார். என் மனைவியை எதிர்த்து எங்கள் ஊரைச்சார்ந்த செல்வம் என்பவரின் மனைவி போட்டியிட்டார் என்று சொன்னால் சரிதான். செல்வத்தின் மனைவிக்கு ஆதரவாக எதிரிகள் தேர்தல் வேலை செய்தார்கள் என்று சொன்னால் தவறு. அந்த சமயத்தில் எதிரிகள் ஊரில் கிடையாது. அந்த முன்விரோதத்தின் காரணத்தால் நான் என் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகளை இந்த வழக்கில் சேர்க்க செய்துள்ளேன் என்று சொன்னால் இதனை நான் மறுக்கிறேன்.மேற்குகாலனியில் கிழமேல் தெருவில் தெற்குபக்கம் அழகர்சாமியின் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். அழகர்சாமியின் வீடு அருகே தென்வடலாக மண்பாதை உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் மூவரையும் எங்கள் வீட்டின் அருகில் பார்த்தேன். என்னுடைய வீடு தெருவின் ஓரத்தில் உள்ளது. அழகர்சாமியின் வீட்டருகே என்னுடைய வீடு இல்லை என்று சொன்னால் தவறு. எதிரிகள் மீதுள்ள முன் விரோதத்தின் காரணத்தால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு.

**2 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

( 1 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி குறிப்பாணை பதிவு செய்யப்பட்டது)

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரிகள் / எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

MADHAVA RAMANUJAM S

Digitally signed by MADHAVA RAMANUJAM S
Date: 2024.12.11 17:34:18 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.